REGISTRAR OF NEWS PAPER FOR INDIA REGN. NO. 15261/2005 (R.DIS NO.1834/04)


CVPA NEWS
A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals
AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION
FILM - 22 CLICK - 12
APRIL 2026 ₹. 1

நமக்கு நாமே பாதுகாப்பு திட்டத்தில் பங்களிப்பு உறுப்பினராக உடனே இணைந்து, போட்டோ வீடியோ கலைஞர்களின் குடும்பத்தின் பாதுகாப்பை உறுதி செய்வீர்!!

- CVPA NNT

# நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்திற்கு NNT உறுப்பினர்கள் தங்களுடைய பங்களிப்பு தொகையை செலுத்துவதில் ஏன் அலட்சியமாக செயல்படுகின்றனர்!

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

இது நாள்வரை நமது சங்க உறுப்பினர்களின் நலனுக்காக நல்ல பல ஆலோசனை வழங்கியதுடன், நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் மூலமாக, பாதிக்கப்படும் நமது கலைஞர்களின் குடும்பங்களுக்கு பெரிய அளவிலான உதவியை செய்ய வேண்டுமென தனது விருப்பத்தை தெரிவித்ததுடன், CVPA NNTயில் தன்னையும் ஒரு பங்களிப்பு உறுப்பினராக இணைத்துக் கொண்டதுடன், அனைவருக்கும் உதவி செய்ய வேண்டும் என்கிற நல்ல நோக்கம் கொண்டவரான, ஆதம்பாக்கத்தை சேர்ந்த திரு.கிருஷ்ண மூர்த்தி அவர்களுடைய மரணம் மிகுந்த மன வருத்தத்தை தந்தது.CVPA NNT உறுப்பினர்கள் சார்பாக அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெறும் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகள் கட்டணமில்லாத உயர்கல்வியில் சேர்ந்து படிக்க விரும்பும் மாணவ- மாணவியர்கள் நம்முடைய சங்கத்திற்காக எம்ஜிஆர் யுனிவர்சிட்டி ஒதுக்கியுள்ள கட்டணமில்லாத சீட்டை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு சங்க நிர்வாகிகளை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளபடுகிறது.

நமது சங்க உறுப்பினர்கள் இயற்கையாக மரணம் அடைய நேரிட்டால்,அந்த குடும்பத்திற்கு உடனடியாக உதவி செய்ய, எந்தவித திட்டமும் சங்கத்தில் இல்லாத ஒரு காரணத்திற்காக, தொடங்கப்பட்டதுதான் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம். இந்த திட்டத்தின்படி,ஆயிரம் போட்டோ-வீடியோ கலைஞர்களை ஒன்றாக சேர்ந்தால், இவர்கள் மூலமாக பெறப்படும் பங்களிப்பு தொகையை கொண்டு 2 லட்சம் ரூபாய் வரை பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் குடும்பத்திற்கு வழங்க முடியும் என்று முடிவெடுத்தோம். ஆனால் 1000 பேர் CVPA NNT யில் உறுப்பினராக இணைவதற்கு முன்னதாகவே ஏழு NNT உறுப்பினர்கள் மரணம் அடைந்துவிட்டனர்.இதுவரை, வெவ்வேறு மாதங்களில் அதிகபட்சமாக 741 பேர் மட்டுமே CVPANNT திட்டத்தில் உறுப்பினர்களாக நம்மால் சேர்க்க முடிந்தது. இருப்பினும், முதல் நான்கு உறுப்பினர்கள் இறந்ததும், அந்த குடும்பங்களுக்கு நாம் குறிப்பிட்டபடி ஒரு பெரிய தொகை கொடுக்க முடியாவிட்டாலும்,அன்று சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் (விபரம் - 2ம்பக்கம் பார்க்கவும்) NNT மூலமாக நிதி வழங்கி இருக்கிறோம்.

ஆரம்பத்தில் NNTயில் உறுப்பினராக சேர்ந்த 281பேர் முதல் நான்கு உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு தங்களுடைய பங்களிப்பு தொகையை வழங்கிவிட்ட காரணத்தாலும்,அவர்கள் அடுத்தடுத்த NNT உறுப்பினர்களின் மரணங்களுக்கு தங்களுடைய பங்களிப்பாக பணம் செலுத்தாத காரணத்தாலும்,அவர்களுடைய CVPA NNT வங்கி கணக்கு ஜீரோ பேலன்ஸ் நிலைக்கு வந்துவிட்டது.இதனால் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம் சற்று பின்னடைவை சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

CVPANNT யில் ஒரு உறுப்பினர் இறந்தவுடன் உடனடியாக அனைவருக்கும் தகவல் தெரிவிக்கப்படுகிறது.மீண்டும் மீண்டும் இது நினைவூட்டபடுகிறது.இருப்பினும் பல CVPA NNT உறுப்பினர்கள் தங்களுடைய பங்களிப்பு தொகையை செலுத்த தவறிவிட்டனர்.இது இந்த திட்டத்தின் நோக்கத்தை முழுமையாக சிதைத்துவிடும்.

சமீபத்தில் விபத்தில் உயிரிழந்த கன்டெய்னர் லாரி ஒட்டுனரின் குடும்பத்திற்கு( 6,00,000) ஆறு லட்சம் ரூபாய் நிதியாக கன்டெய்னர் அசோசியேசன் சார்பாக வழங்கப்பட்டது.ஆனால்,நம்முடைய அமைப்பு இவ்வளவு பெரிய அமைப்பாக இருந்தும் ஏன் இந்த தோய்வு!

ஏன் இந்த அலட்சியம்!
இது புரியாத புதிராக உள்ளது.

இப்படிக்கு
**P.துரைபாபு**
CVPA செயலாளர்

## நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு (CVPA NNT FUND) நிதியை மறைந்த திரு.கேசவராம் குடும்பத்தினர் நேரில் வந்து பெற்றுக்கொண்டனர்.!






தென்சென்னை-எஸ்2,மடிப்பாக்கம் பகுதியை சேர்ந்த நமது CVPA சங்க உறுப்பினர், **திரு.A.கேசவராம்** அவர்கள் 21.12.2025 அன்று இயற்கை எய்தினார்.இவர் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் பங்களிப்பு உறுப்பினராக இருந்து வந்தார்.எனவே இவரது குடும்பத்திற்கு CVPANNT குடும்ப நல பாதுகாப்பு நிதி, 08.04.2026. அன்று நமது CVPA சங்க அலுவலகத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.திரு.கேசவராம் அவர்களின் குடும்பத்தினர் ( 82,000 ) எண்பத்து இரண்டாயிரத்திற்கான காசோலையை நேரில் வந்து பெற்றுக்கொண்டார்கள். CVPA நிர்வாக குழு, செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் இந்த நிதி வழங்கப்பட்டது.

## வருந்துகிறோம்



தென் சென்னை, எஸ் - 2, ஆதம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் **திரு.S.கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் கடந்த 29.03.2026 அன்று மாலை மரணமடைந்தார். தகவல் அறிந்தவுடன் சங்க நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள் நேரில் சென்று, இறுதி அஞ்சலி செலுத்திவிட்டு,அவருடைய குடும்பத்தினரை சந்தித்து. ஆறுதல் கூறினார்கள்.பின்னர் நமது சங்கத்தின் பொதுக்குழு. தீர்மானப்படி மறைந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை அவருடைய வாரிசுதாரர்களிடம் முறைப்படி வழங்கினார்கள். இவர் நமக்கு நாமே திட்டத் தின் பங்களிப்பு உறுப்பினராகவும் இருந்து வந்தவர் என்பதால் இவரது குடும்பத்திற்கு CVPA NNT பாதுகாப்பு நிதியில் இருந்து நிதி விரைவில் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## CVPA குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின்படி CVPA NNT FUND ஐ பெற்றுக்கொண்ட NNT உறுப்பினர் குடும்பங்களின் விபரங்கள்



**R. சேகர்**
**வயது:69**
CVPA ID NO:5074
Death Date:13.02.2025
Nominee Received
CVPA NNT FUND
Amount: 1,09,800



**D. P. கமலக்கண்ணன்**
**வயது:59**
CVPA ID NO: 0116
Death Date::27.05.2025
Nominee Received
CVPA NNT FUND
Amount :1,13,400



**R.ராஜாராமன்**
**வயது:47**
CVPA ID NO:1802
Death Date:14.06.2025
Nominee Received
CVPA NNT FUND
Amount:1,14,800



**R.ரமணிதரன்**
**வயது:71**
CVPA IDNO:2235
Death Date:08.10.2025
Nominee Received
CVPA NNT FUND
Amount:1,21,600



**கேதார் தவே**
**வயது:51**
CVPA ID NO:2001
Death Date:01.11.2025
Nominee Received
CVPA NNT FUND
Amount:1,22,000



**M.A.கேசவராம்**
**வயது:60**
CVPA ID NO:4343
Death Date:21.12.2025
Nominee Received
CVPA NNT FUND
Amount:82,000



**N.ரவிச்சந்திரன்**
**வயது:55**
CVPA ID NO:0317
Death Date:04.01.2026
Nominee Received
CVPA NNT FUND Amount :
With In 10 Days



**S.கிருஷ்ணமூர்த்தி**
**வயது:58**
CVPA ID NO:
Death Date:29.03.2026
Nominee Received CVPA NNT
FUND Amount:Waiting

ஒரு NNT உறுப்பினர் மரணம் அடையும் போது, அப்போது சேர்ந்து இருக்கும் NNT உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை வைத்து, அவர்களுடைய பங்களிப்பு தொகையை NNT உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும்.இதனால் NNT FUND மாறுபடும்.

## மருத்துவ உதவித் தொகை



வடசென்னை, வண்ணாரப்பேட்டை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு.கே.பாலாஜி அவர்களுக்கு, விபத்தின் காரணமாக கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சைக்காக ஓய்வெடுத்து வரும் நிலையில் அவரை நேரில் சென்று சந்தித்த சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் அவரை நலம் விசாரித்து,நமது சங்கத்தின் சார்பில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகையாக 5,000 ரூபாயை வழங்கினார்கள்.

Regd No. : 446/96

## சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி
## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்
## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ருபாய்

(*நிபந்தனைக்கு உட்பட்டது)

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |



**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351